05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# புறநானூற்றில் செவ்வியல் பண்புகள்

# ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM '*PURANANURU*' DENGAN MENGGUNAKAN TEORI SEVVIYAL


**வனிதா த/பெ பரஞ்ஜோதி**

**VANITHA A/P PARANJOTII**


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**சுல்தான் இதுரீசு கல்வியல் பல்கலைக்கழகம்**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**


**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM '*PURANANURU'*
DENGAN MENGGUNAKAN TEORI SEVVIYAL

VANITHA A/P PARANJOTII

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT
UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA SASTERA
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**Sila tanda (√)**

Kertas Projek

Sarjana Penyelidikan

Sarjana Penyelidikan dan Kerja Kursus

Doktor Falsafah

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada ....9...(hari bulan)...12.... (bulan) 2021

**i. Perakuan pelajar** :

Saya, **VANITHA A/P PARANJOTII ( M20142002402 )** (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk **ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM PURANANURU**

adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

-------------------------

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, **MANONMANI DEVI A/P M.A.R ANNAMALAI** (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM PURANANURU** .

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah

**IJAZAH SARJANA KESUSASTERAAN TAMIL** (SLA NYATAKAN NAMA IJAZAH )

10.12.2021

Dr. Manonmani Devi A/P M.A.R Annamalai
Pensyarah Kanan
Jabatan Bahasa Moden
Fakulti Bahasa dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris
Tanjong Malim, Perak

Tarikh

Tandatangan Penyelia

UPSI/IPS-3/BO 31
Pind.: 01 m/s:1/1

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: **ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM PURANANURU**

No. Matrik /*Matric's No.*: **M20142002402**

Saya / *I* : **VANITHA A/P PARANJOTII**

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah */ Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| [ ] | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| [ ] | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| [ / ] | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

Tarikh: 10.12.2021

Dr. Manonmani Devi A/P M.A.R Annamalai
Pensyarah Kanan
Jabatan Bahasa Moden
Universiti Pendidikan Sultan Idris
Tanjong Malim, Perak.

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# நன்றியுரை

தாய் தந்த தமிழுக்கும் தரணி போற்றும் தமிழுக்கும் முதல் வணக்கம். 'புறநானூற்றில் செவ்வியல் பண்புகள்' எனும் இவ்வாய்வினை நான் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குப் பலரும் பல வகையில் புரிந்த செயற்கரிய உதவியினால் இன்று இவ்வாய்வு சிறப்பாக முடிந்துள்ளது. அவ்வாறு உதவி நல்கிய அனபுள்ளங்களுக்கு என் நன்றி என்றும் உரியது. அந்தப் பட்டியலில் முதலில் இருப்பவர் என் மரியாதைக்குரிய UPSI கல்விப்பிரிவு விரிவுரையாளர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை ஆவார். அவர்களின் வழிகாட்டுதல் இல்லாதிருந்தால் இவ்வாய்வு முற்றுப் பெற்றிருக்காது. ஆய்வில் காணும் குற்றங்களைச் சுட்டிக் காட்டித் திருத்தித் தேவையான செய்திகளைக் கூறி இவ்வாய்வினைச் செப்பனிட்டு இன்று முழுமையடையக் காரணமாயிருந்த அவருக்கு முதற்கண் நன்றி உரித்தாகுக. மேலும், விரிவுரையாளர் முனைவர் செள.வீரலட்சுமி மற்றும் முனைவர் கு.முனீஸ்வரன் அவர்களும் எனது ஆய்வினச் சிறப்பாகச் செய்திட வழிகாட்டியுள்ளனர். அவரகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்ப்பிரிவில் தமிழ்மொழியிலே முதுகலைப்பட்ட ஆய்வு மேற்கொள்வதற்கு வாய்ப்பு நல்கிய பல்கலைக்கழகத்திற்கும் என் மனமுவந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். என் ஆய்விற்குத் தேவையான நூல்களை இரவலாகக் கொடுத்து உதவிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக நூல்நிலையப் பொறுப்பாளர்களுக்கும் இவ்வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆய்வாளர்களின் ஆய்வேடுகளைப் பார்க்க அனுமதித்த மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவு நூல்நிலையப் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றி.

எனது ஆய்வை மேற்கொள்ளத் துணையாக நின்ற என் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறப்பு அன்னையால், சிறப்பு குரு தந்த கல்வியால்,
எனக்கு பெருமை சேர்த்தது தமிழ்ப்பால்,
என்றும் தமிழ் வாழ தவம் கொள்வேன்.

வனிதா த/பெ பரஞ்ஜோதி


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச்சுருக்கம்

புறநானூற்றில் செவ்வியல் பண்புகள் என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் நோக்கமானது புறநானூற்றில் காணப்படும் செவ்வியல் பண்புகளைக் கண்டறிவது; செவ்வியல் பண்புக் கூறுகளைப் பகுத்தாராய்ந்து விளக்குவது; சங்க காலத்தில் தோன்றிய புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் செவ்வியல் பண்புகளின் சிறப்புகளைக் கண்டறிந்து விளக்குவது என்ற மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள எட்டுச் செவ்விலக்கியப் பண்புகளைப் பகுத்தாராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். சங்க இலக்கிய நூல்கள் 41 ஆக இருந்த போதிலும் ஆய்வின் எல்லை கருதி, புறநானூற்றில் உள்ள 400 பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வின் தரவுகள் முதன்மைச் சான்றாதாரங்கள், துணைச் சான்றாதாரங்கள் வழி திரட்டப்பெற்றுள்ளன. திரட்டப்பட்டுள்ள தரவுகள் மதிப்பீடு செய்து விளக்கமுறையிலும் பகுப்புமுறையிலும் மற்றும் நூலாய்வு முறையிலும் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில், பதினொரு செவ்வியல் பண்புகள் ஆய்வுக் கோட்பாடாகக் கையாளப்பட்டுள்ளன. செவ்வியல் பண்புகளின் கூறுகளான தொன்மை, தனித்தன்மை, பொதுப்பண்பு, நடுநிலைமை, பண்பாட்டுக் கலை, பட்டறிவு வெளிப்பாடு, இலக்கிய வளம், உயர்சிந்தனை மற்றும் கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு பங்களிப்பு ஆகிய எட்டுக் கூறுகளின் அடிப்படையில் புறநானூற்றுப் பாடலை ஆராய்வதோடு அதன் சிறப்புகளை விளக்குவதாக இந்த ஆய்வு அமைகிறது. ஆராய்ச்சி முறைகள் மேலும் மேம்படுத்தவும் செவ்வியல் பண்களின் சிறப்பியல்புகளின் தனித்துவத்தை அடையாளம் காண விரிவான தரவைப் பெறுவதற்கும் அளவுசார் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், புறநானூற்றுப் பாடல்களில் உள்ள தகவல்கள் யாவும் செவ்வியல் பண்புகளைக் கொண்டவை என்றும் அவை வாழ்வியல் நோக்கில் படைக்கப்பட்டுள்ளன என்பதும் கண்டறியப்பட்டுள்ளன. இச்செவ்வியல் பண்புகள் இன்றைய சமூதாயத்திற்கும் இளைஞர்களுக்கும் ஏற்படுகின்ற வாழ்வியல் சிக்கலையும் இன்னல்களையும் களைய பெரும் துணைபுரியும் என்பது ஆய்வின் விளைப்பயனாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ANALISIS CIRI-CIRI KLASIKISME DALAM '*PURANANURU*' DENGAN MENGGUNAKAN TEORI SEVVIYAL**

## ABSTRAK

Kajian ini meninjau ciri-ciri klasikisme dalam karya *Purananuru*. Objektif kajian ini untuk mengenal pasti ciri-ciri klasikisme, menganalisis ciri-ciri klasikisme serta menjelaskan keunikan ciri-ciri klasikisme dalam karya *Purananuru*. Kajian ini berdasarkan lapan ciri klasikisme. Kajian ini menggunakan data sumber yang diambil daripada 400 buah puisi yang terdapat dalam karya *Purananuru*. Analisis dan perbincangan dibuat berpandukan Teori *Sevviy*al yang dipelopori oleh Manavai Mustafa. Kajian ini menggunakan kaedah kualitatif yang merangkumi kajian analisis teks dan deskriptif. Hasil kajian menunjukkan bahawa *Purananuru* mempunyai lapan aspek *sevviyal* iaitu *thonmai*, *thanithanma*i, *pothupanpu*, *nadunilamai, panpaaddu* kalai *paddarivu velipadu, ilakkiya valam, uyarsinthanai* dan *kalai ilakkiya thanithanmai velippadu pangkalippu*. Dapatan kajian menunjukkan bahawa, unsur klasikisme yang terdapat dalam Karya *Purananuru* boleh dibahagikan kepada lapan ciri *sevviyal* dan ciri-ciri *sevviyal* yang banyak terdapat dalam karya *Purananuru* ialah *pothupanpu, panpaaddu kalai paddarivu velipadu* dan *uyarsinthanai*. Dapatan kajian juga membuktikan lapan ciri *sevviyal* yang terakam dalam karya *Purananuru* dapat menjelaskan keunikan ciri-ciri klasikismenya. Hasil kajian ini akan menjadi panduan dan pedoman kepada generasi muda untuk mengenal pasti dan memahami ciri-ciri tingkah laku *sevviyal* yang terdapat dalam teks-teks sastera klasik Tamil. Kerangka ini juga boleh diaplikasikan oleh pengkaji lain dengan menggunakan teks sastera Tamil tempatan kita.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**ANALYSIS OF CHARACTERISTICS OF CLASSICISM IN *'PURANANURU'* BY USING SEVVIYAL THEORY**

## ABSTRACT

This study examines the features of classicism in the work of *Purananuru*. The objective of this study is to identify the characteristics of classicism, analyze the characteristics of classicism and explain the uniqueness of the characteristics of classicism in the work of *Purananuru*. This study is based on eight features of classicism. This study uses source data taken from 400 poems found in the work of *Purananuru*. The analysis and discussion are made based on the Sevviyal Theory pioneered by Manavai Mustafa. This study uses a qualitative method that includes textual and descriptive analysis studies. The results show that *Purananuru* has eight sevviyal aspects namely *thonmai, thanithanmai, pothupanpu, nadunilamai, panpaaddu kalai paddarivu velipadu, ilakkiya valam, uyarsinthanai* and *kalai ilakkiya thanithanmai velippadu pangkalippu*. The findings of the study show that, the elements of classicism found in *Purananuru* can be divided into eight sevviyal features and the sevviyal features abundant in the works of *Purananuru* are *pothupanpu, panpaaddu kalai paddarivu velipadu* and *uyarsinthanai.* The findings of the study also prove that the eight sevviyal features recorded in *Purananuru* can explain the uniqueness of its classicism. The results of this study will be a guideline to the younger generation to identify and understand the characteristics of sevviyal behavior found in classical Tamil literary texts. This framework can also be applied by other researchers using our local Tamil literary texts.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**பொருளடக்கம்**


**பக்கம்**

**ஆய்வறிக்கை நம்பகத்தன்மையின் சான்றாதாரம்** ii

**ஆய்வறிக்கைச் சமர்ப்பித்தலின் உறுதிபாரம்** iii

**நன்றியுரை** iv

**ஆய்வுச் சுருக்கம் (தமிழ்மொழி)** v

**ஆய்வுச் சுருக்கம் (மலாய் மொழி)** vi

**ஆய்வுச் சுருக்கம் (ஆங்கில மொழி)** vii

**பொருளடக்கம்** viii

**அட்டவணைப் பட்டியல்** xv

**வரைப்படம் பட்டியல்** xv

**குறிவரைவுப் பட்டியல்** xvi

**இயல் 1 அறிமுகம்**

1.0 முன்னுரை 1

1.1 ஆய்வுப் பின்னணி 4

1.2 ஆய்வுச் சிக்கல் 9

1.3 ஆய்வு நோக்கம் 12


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.4 ஆய்வு வினா 12

1.5 ஆய்வு நன்மைகள் 12

1.6 ஆய்வு எல்லை 13

1.7 ஆய்வுச் சான்றாதாரங்கள் 14

1.7.1 முதன்மைச் சான்றாதாரங்கள் 14

1.7.2 துணைச் சான்றாதாரங்கள் 14

1.8 கலைச்சொல் விளக்கம் 15

1.8.1 புறநானூறு 15

1.8.2 செவ்வியல் பண்புகள் 16

1.9 தொகுப்புரை 18

**இயல் 2 முந்தைய ஆய்வு**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.0 முன்னுரை 19

2.1 புறநானூறு 20

2.2 செவ்வியல் 22

2.2.1 செவ்வியலுக்கான அடிப்படைத் தகுதிகள் 27

2.2.2 செவ்விலயலின் தோற்றமும் வளர்ச்சியும் 29

2.2.3 செவ்வியலின் வளர்ச்சி 30

2.2.3.1 தொடக்க செவ்வியல் காலம் 30

2.2.3.2 செவ்வியல் கருத்து வளர்ச்சி பெற்ற காலம் 31

2.2.3.3 செவ்வியலின் பிற்காலம் 31

2.2.3.4 தமிழ்ச் செவ்வியலின் காலம் 33

2.3 செவ்வியல் கோட்பாடு 34

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2.4 செவ்வியல் கோட்பாடு மணவை முஸ்தபா 36

2.5 மணவை முஸ்தபா 37

2.6 முந்தைய ஆய்வுகள் 40

2.7 தொகுப்புரை 63

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.0 முன்னுரை 65

3.1 ஆய்வு வடிவமைப்பு 66

3.1.1 ஆய்வு கட்டமைப்பு 67

3.2 ஆய்வு அணுகுமுறை 68

3.2.1 ஆவணப் பகுப்பாய்வு முறை 68

3.2.2 நூலக ஆய்வு முறை 69

3.3 ஆய்வுத் தரவு 69

3.4 தரவுச் சேகரிப்பு முறை 70

3.5 தரவுப் பகுப்பாய்வு முறை 72

3.6 ஆய்வுக் கோட்பாடு 73

3.7 கோட்பாட்டுக் கட்டமைப்பு 75

3.8 தொகுப்புரை 76

**இயல் 4 பகுப்பாய்வுகளும் கண்டுபிடிப்புகளும்**

4.0 முன்னுரை 77

4.1 தொன்மை 78

4.4.1 உழவின் உயர்வு 79

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.4.2 மக்கள் நிலையறிந்து வரிவிதித்தல் 82
4.4.3 புராண மரபு கூறுகள் 83
4.4.4 புலவர்களிண் வாய்மை 85
4.4.5 தெய்வம் 86
4.2 தனித்தன்மை 90
4.2.1 காதலும் வீரமும் 90
4.3 பொதுப்பண்பு 91
4.3.1 விருந்தோம்பல் 92
4.3.2 உலகுடன் ஒன்றி வாழ்தல் பண்பாடு 93
4.3.3 அரசாட்சி 94
4.3.4 நிர்வாகவியல் 96
4.3.4.1 வரிவசூலில் நிர்வாகவியல் அணுகுமுறை 97
4.3.4.2 நிறுவனத் தலைவர் 98
4.3.4.3 பணிப்பகிர்வும் கடமைகளும் 99
4.3.4.4 பெருஞ்சோற்றுநிலை 100
4.3.4.5 இலாபப் பகிர்வு 101
4.3.4.6 பொற்கைப் பாண்டியன் - நீதி தவறாமை 103
4.3.4.7 தீர ஆய்தல் 104

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.3.5 மக்கட் செல்வம் 105

4.3.6 கல்வியின் மாண்பு 106

4.4 நடுநிலைமை 107

4.4.1 மனிதநேயம் 108

4.4.2 அன்பு 110

4.4.3 மன்னித்தல் 111

4.4.4 சமாதானப்படுத்துதல் 112

4.5 பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு 115

4.5.1 புறநானூறு காட்டும் உணவு முறை 116

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2 உடை 121

4.5.3 அறிவியல் 123

4.5.4 மானவுணர்வுடன் வாழ்தல் 125

4.5.5 தமிழர் வீரம் 126

4.5.6 மறச்சிறப்பு 127

4.5.7 ஈகைப் பண்பு 130

4.5.8 பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் 131

4.5.9 காலமறிந்து போர்புரியும் பண்பு 133

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.5.10 புலவர்களின் பட்டறிவும் 135

4.6 இலக்கிய வளம் 137

4.6.1 அகமும் புறமும் 137

4.6.2 மனைவிளக்கு 138

4.7 உயர்சிந்தனை 140

4.7.1 நட்பும் நன்றியும் 141

4.7.2 தனிமனித ஒழுக்கம் 142

4.7.3 பிறர் நலம் பேணல் 143

4.7.4 போரில் அறம் 144

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.7.5 கொடை 145

4.7.6 சான்றாண்மை 147

4.7.7 வாணிகம் 151

4.7.8 நிலையாமை 162

4.8 கலை இலக்கிய தன்மை வெளிப்பாடு பங்களிப்பு 164

4.8.1 ஓவியக்கலை 164

4.8.2 கலையும் இசைக் கருவிகளும் 167

4.8.3 விளையாட்டு 168

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 5 ஆய்வு முடிவு**


| | |
|---|---|
| 5.0 முன்னுரை | 173 |
| 5.2 கண்டுபிடிப்புகளின் கருத்தாடல் | 174 |
| 5.2.0 புறநானூற்றில் செவ்வியல் பண்புகள் | 175 |
| 5.2.1 புறநானூப்பாடலில் தொன்மை | 176 |
| 5.2.2 புறநானூப்பாடலில் தனித்தன்மை | 177 |
| 5.2.3 புறநானூப்பாடலில் பொதுப்பண்பு | 177 |
| 5.2.4 புறநானூப்பாடலில் நடுநிலைமை | 180 |
| 5.2.5 புறநானூப்பாடலில் பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு | 182 |
| 5.2.6 புறநானூப்பாடலில் இலக்கிய வளம் | 184 |
| 5.2.7 புறநானூப்பாடலில் உயர்சிந்தனை | 185 |
| 5.2.8 புறநானூப்பாடலில் கலை இலக்கிய தன்மை வெளிப்பாடு பங்களிப்பு | 188 |
| 5.4 ஒட்டுமொத்த ஆய்வு முடிவு | 190 |
| 5.5 தொடர் ஆய்விற்கான பரிந்துரை | 192 |
| 5.6 முடிவுரை | 197 |
| மேற்கோள் நூல்கள் | 199 |
| ஆய்வறிக்கையின் சுருக்கம் | |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அட்டவணைப் பட்டியல்**

**எண்** **பக்கம்**

1.1 புறநானூற்றில் செவ்வியல் பண்புகள் 73

1.2 உணவுப் பொருள் உற்பத்தி முறைகள் 117

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபடப் பட்டியல்**


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வுக் கட்டமைப்பு | 67 |
| 3.2 | தரவுச் சேகரிப்பு முறை | 71 |
| 3.3 | கோட்பாட்டுக் கட்டமைப்பு | 75 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**குறியீட்டுப் பட்டியல்**


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | செவ்வியல் பண்புகள் | 173 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

### 1.0 முன்னுரை

தமிழ் மொழியின் தொன்மையான இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும். சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் என மொழி அறிஞர்களான சூரியநாராயண சாஸ்திரியார், பூரணலிங்கம்பிள்ளை, விசுவநாதன், இராமானுஜம், சண்முகப்பிள்ளை, தாமஸ்மால்டன், ஜான்சாமுவேல் போன்றோர் நிறுவியுள்ளனர். உலக மொழிகளில் செவ்வியல் மொழிகளாகக் கருதப்படுவன கிரேக்க மொழி, இலத்தின் மொழி, ஹீப்ரூ, சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளாகும். பண்டைக் காலத்திலிருந்து தொடர்ந்து நிலைபெற்றிருப்பின் அதுவே செவ்வியல் மொழியாகக் கருதப்படுகின்றது (அகத்தியலிங்கம், 1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மக்கள் பயன்பாட்டில் உள்ள மொழிகள் மட்டுமே செம்மொழிகள் என்றும் அல்லது செவ்வியல் மொழி என்றும் அறிவித்துள்ளனர். செவ்வியல் என்ற சொல் ஆங்கிலத்தில் *classism* எனக் கூறப்படுகிறது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


. செவ்வியல் பண்புகள் அல்லது தன்மைகள் *classical characterizes* என்பதாகும். செவ்வியல் தன்மை என்பது தொன்மை (*Antiquity*), ஒத்திசைவு (*Harony*), தெளிவு (*Clarity*), தன்னடக்கம் (*Restraint*), கண்ணியம் (*Serenty*), இலட்சியம் (*Idelalis* ), உலகப் பொதுமை (Universslity), பகுத்தறிவு (*Reason*), ஒழுங்கு (*Oder*), கண்ணோட்டம் (*Humasnism*) என பத்து பண்புகள் கொண்ட தொகுப்பாக அமைகின்றன என்கிறார் மொழியறிஞர் வா. செ. குழந்தைசாமி (ஆதிநாராயணன், 2011).

கிராலியர் கலைக்களஞ்சியம் (Glolier Academic Encyclopaedia) செவ்வியல் தன்மைக்கான இலக்கணத்தைப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

> The word classicism in literature refers to those
> elements of sytle or content such as reason ,
> clarity , oder , restraint and humanitarian outlook
> that characterrized the writting of ancient Greeks ,
> ranging from Homer , Plato and Aristotle.
> (குழந்தைசாமி, 2005)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியத்தில் செவ்வியல் தன்மை என்பது கிரேக்கர்களின் தொன்மையானவையான ஹோமர் முதல் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களின் இலக்கியங்களில் பிரதிபலிக்கும் மொழி அமைப்பு அல்லது உள்ளடகத்தில் குணாதிசயங்களான பகுத்தறிவு, தெளிவு, ஒழுங்கு, தன்னடக்கம் மனிதநேயம் கொண்டதாகும் என்கிறார். (குழந்தைசாமி, 2005)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகை புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் செவ்விலக்கியப் பண்புகளை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகிறது.

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்க தமிழ் நூலாகும். இது சங்க காலத் தமிழ் நூல் தொகுப்பான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும், தொகுப்பித்தவர் பெயரும் தெரியவில்லை( ஆதிநாராயணன்,2012).

புறநானூற்றில் உள்ள பாடல்களின் காலம் கி.மு.1000 முதல் கி.பி.300 வரை என்றும் கி.மு.300 முதல் கி.பி.300 வரை என்றும் கருதுகின்றது என்கிறார் (தமிழண்ணல், 2000). எவ்வறாயினும், புறநானூறு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியம் ஆகும். புறநானூறு பண்டைக் காலத் தமிழர்களின் வீரம், மானம், கொடை, ஒப்புரவு, வலிமை, வறுமை, சமூகச் சூழல், அரசியல், அறநோக்கு, புகழ், கல்வி, விருப்பம் போன்ற புறப்பொருளைக் கொண்டதாகும்.

சங்ககால அக இலக்கியங்களில் குறுந்தொகையும் புற இலக்கியங்களில் புறநானூறும் பலரால் எடுத்தாளப் பெற்ற சிறப்புடைய இலக்கியம். புறநானூற்றில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனும் பன்னிரண்டு திணைக்குரிய பாடல்கள் உள்ளன. இப்பாடல்களுக்குரிய துறைகள் அறுபத்தைந்து. திணை துறையில்லாத பாட்டு 289ஆம் பாடலாகும். சங்க

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியங்களில் மிகுதியான போர்ச் செயல்களைக் கூறும் நூல் இதுவே. எனினும் போரின்றி உலகோர் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய தேவையினையும் இந்நூல் வற்புறுத்துகின்றது. போற்றத் தக்க சான்றோர்களின் வரலாறாகத் திகழ்வது புறநானூறு. சங்க இலக்கியங்களில் இன்றும் பலராலும் விரும்பிப் பயிலப்பெறும் இலக்கியம் புறநானூறு ஆகும்.

இந்த ஆய்வில் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள எட்டுச் செவ்வியல் பண்புகளும் அதன் சிறப்புகளும் பற்றி ஆராயப்படவுள்ளன.

**1.1 ஆய்வுப் பின்னணி**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியம் முதன்மை வகிக்கின்றது. பதினெண் மேற்கணக்கு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியன சங்க இலக்கியம் ஆகும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்மேற்கணக்கு நூல்கள் ஆகும். எட்டுத்தொகை எனப்படுவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு புறநானூறு ஆகிய எட்டுத்தொகை நூல்கள் ஆகும்.

புறநானூறு எனும் தொகை நூல் நானூறு பாடல்களைக் கொண்டது. புறநானூற்றில் அடங்கியுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களாலும் மன்னர்களாலும் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. சங்க காலத் தமிழ் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி நாகரிகம், கலை வளர்ச்சி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வணிகம் முதலானவற்றைப் புறநானூற்றின் வழி அறியலாம் என்கிறார் உரையாசிரியர் மாணிக்கவாசகன் (மாணிக்கவாசகன், 2012).

> தமிழர் வாழ்வின் வரலாறு வீரத்தினை விளக்கும்
>
> இலக்கியம், ஈகையும் கொடையும் இரு கண்ணென
>
> வாழ்ந்த ஈர மனமுடைய தமிழர்களின் இறவாப்
>
> புகழ் பேசும் எழுத்து ஓவியமாகப் கருதப்படுவது
>
> புறநானூறு.
>
> (மாணிக்கவாசகன், 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சங்ககால வரலாற்றைக் கூறும் புறநானூறு இலக்கியத்தை நூலாகப் பதிப்பித்தவர், உ.வே.சாமிநாதர் ஐயர், நூறு ஆண்டுகளுக்கு முன்பே 1894–இல் இந்நூலை வெளியிட்டுள்ளார் (மாணிக்கவாசகன், 2012).

புலவர்கள் பலரால் பாடப்பெற்ற புறப்பொருளைப் பற்றிப் நானூறு பாடல்களால் தொகுக்கப் பெற்றதால் 'புறநானூறு' என்னும் பெயர் பெற்றது. பாக்களின் அடி வரையறை 4 அடி முதல் 40 அடி வரை உள்ளன. புறநானூற்றில் 400 பாடல்களுல் 384 பாடல்களை 157 புலவர்கள் பாடியுள்ளனர். 400 புறப்பாட்டுகளில் 138 பாட்டுகள் 43 வேந்தர்களைப் பற்றியும் 141 பாடல்கள் 48 குறுநில மன்னர்களைப் பற்றியும் 121 பாட்டுக்கள் பாடப்பட்டவர்களின் பெயர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தெரியாதவையும் அமைந்துள்ளன. புறநானூற்றின் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன. (பழனிச்சாமி,1989)

தொல்காப்பியம் தமிழின் தொன்மைக்குச் சான்றாகும். இதனைத் தொல்காப்பியத்திலும் காணலாம்.

செந்தமிழ் நிலத்து வழக்கு ( சொல்: 392)
செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் ( சொல்: 394)

போன்ற இடங்களில் செந்தமிழ் என்ற சொல் நிலைமொழியையே குறிக்கின்றன. பழமை எனும் கூறும் பொழுது தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் செவ்வியல் மொழிகள் எனக் கருதப்படுகின்றது. இந்நிலையில், சங்க இலக்கியங்களைக் கொண்டும் தொல்காப்பியத்தைக் கொண்டும் தமிழ் மொழியைச் செவ்வியல் மொழியாகக் கருதுவதில் தவறேதுமில்லை என்கிறார் (அகத்தியலிங்கம்,1997).

தமிழ் மொழியின் சிறப்பை வேர்ச்சொல் ஆய்வு வாயிலாகத் தமிழின் செம்மைப் பண்புகள் பதினாறு என்கிறார் தேவநேயப்பாவாணர் (2001). அவை ஒருங்கே; தொன்மை, முன்மை, எளிமை, ஒண்மை (ஒளிமை), இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை,பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


George Hurtt, ஒரு மொழி செம்மொழி தகுதிகளைப் பெருவதற்கு கீழ்க்காணும் வரையறைகளைக் கொடுத்துள்ளார் (ஆதிநாராயணன், 2011).

i. செவ்வியல் இலக்கியங்களைக் கொண்டிருத்தல்.

ii. தனக்கே உரிய தனிச்சிறப்பான இலக்கிய மரபினையும் இலக்கிய வளத்தையும் பெற்றிருத்தல்.

iii. தொன்மை உடைமை

iv. சிறந்த இலக்கிய கொள்கைகளைப் பெற்றிருத்தல்.

v. விழுமிய இலக்கண மரபுகளைக் கொண்டிருத்தல்

vi. இக்காலப் புதிய பண்பாட்டு மரபுகளின் வாயிலாக விளங்குதல்.

மணவை முஸ்தபா (2004), செம்மொழிக்கான அடிப்படைத் தகுதிகள் பதினொன்று என்கிறார். அவையாவன:- தொன்மை, பிறமொழித் தாக்கமில்லாத் தனித்தன்மை, தாய்மைத்தன்மை, இலக்கிய வளம், இலக்கணச்சிறப்பு, பொதுமைப்பண்பு, நடுவுநிலைமை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு, உயர்சிந்தனை, கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு, மொழிக்கோட்பாடு என, பதினொன்று பண்புகள் கொண்ட தொகுப்பாக அமைகின்றன என்கிறார் ஆதிநாராயணன் (2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வா.செ.குழந்தைசாமி (ஆதிநாராயணன், 2011) ஒரு மொழி செவ்வியல் மொழி என்று கூறுவதற்கு அம்மொழியின் மொழியிலக்கண அமைப்புகள் மட்டுமல்லாமல் அதன் இலக்கியத்தையொட்டிய மதிப்பீடே முதன்மையாகக் கொள்ளப்படுகிறது. Glolier Academic Encyclopaedia வையும் Encyclopadia Britannica வையும் ஆராய்ந்து செம்மொழித் தகைமைகளுக்கான பத்துத் தகுதிகளை குழந்தைசாமி தருகிறார் (ஆதிநாராயணன், 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவையாவன :

| | |
|---|---|
| i. தொன்மை | (Antiquity) |
| ii. ஒத்திசைவு(சமநிலை) | (Harmony) |
| iii. தெளிவு | (Clarity) |
| iv. தன்னடக்கம் (கட்டுப்பாடு) | (Restraint) |
| v. கண்ணியம் (தூய்மை) | (Serenity) |
| vi. உயர் இலட்சியம் | (Idealism) |
| vii. உலகப் பொதுமை | (Universslity) |
| viii. பகுத்தறிவு (நியாயமுடைமை) | (Reason) |
| ix. ஒழுங்கு | (Oder) |
| x. கண்ணோட்டம் (மனிதாயம்) | (Humanism) |

இத்தகுதிகள் கிரேக்க, இலத்தீன் மொழிகளின் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாகும் (ஆதிநாராயணன்,2011). கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னர் இயற்றப் பெற்ற நாற்பத்தொரு நூல்கள் செவ்வியல் இலக்கியங்களாக ஏற்கப்பெற்றுள்ளன. அவை தொல்காப்பியம், குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாட்டுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, பழமொழி, சிறுபஞ்சமூலம், திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் என்பனவாகும் (சுயம்பு, 2004).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேற்கூறப்பெற்ற அறிஞர்களின் ஆய்வுரையின் அடிப்படையில் செம்மொழிக்கான பதினோறு தன்மைகள் உள்ளன என்பது தெரியவருகிறது. அவை, தொன்மை, தனித்தன்மை, அனைவரும் ஏற்கும் பொதுப்பண்புகள், நடுவுநிலமை, தாய்மைத்தன்மை, பண்பாட்டுப் பட்டறிவின் வெளிப்பாடு, பிறமொழித்தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர்ந்த சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு மற்று மொழிக்கோட்பாடு போன்றவையாகும்.

**1.2 ஆய்வுச் சிக்கல்**

புறநானூற்றில் உள்ள பாடல்கள் அனைத்தும் மானம், வீரம், கொடை ஆகிய புற கருத்துக்களின் அடிப்படையில் புனையப்பட்டுள்ளன பழனிச்சாமி.(1989). தமது ஆய்வு நூலில் புறநானூறு பாடல்கள் புறவாழ்க்கையை உணர்த்தும் நூலாக அமைந்துள்ளது என விளக்கியுள்ளார். அந்நூலில் இல்வாழ்க்கையின் சிறப்பு, கணவன் மனைவியர் பண்புகள், விருந்தோம்பல், மகளிர் நிலை, கல்வியின் மேன்மை, வாணிபம், உழவு என புறப்பொருளைச் சார்ந்துள்ளது என விளக்கியுள்ளார். அவர் தமது ஆய்வு நூலில் செவ்வியல் பண்புகள் எனும் சொல்லை எங்கும் பயன்படுத்தவில்லை. செவ்வியல் பண்புகளுக்கான வரையரையையும் கொடுக்கவில்லை. ஆனால், அவர் தம் நூலில் சில செவ்வியல் பண்புக்களின் தகுதிப்பாட்டைத் தமது தமிழர் பண்பாடு எனும் ஆய்வுக் கட்டுரையில் புகுத்தி விளக்கியுள்ளதைக் காணமுடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மொழியின் சிறப்பையும் இலக்கியத்தின் மாண்பையும் உணர்ந்து கொள்ள அளவுகோல் தேவைப்படுகிறது. ஒரு கட்டமைப்பும் தகுதிபாடும் இருந்தால் மட்டுமே ஓர் இலக்கியத்தின் சிறப்பையும் ஆளுமையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகவே, புறநானூறு என்பது ஒரு செவ்வியல் இலக்கியம் என்று மிக எளிதாகக் கூறி விட முடியாது. செவ்வியல் இலக்கியத்திற்கான பதினொரு தகுதிபாட்டைப் பொருத்திப்பார்க்க வேண்டியுள்ளது.

தொடர்ந்து, தமிழண்ணல் (2000) அவர்கள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட ஒரு தொகைநூல் புறநானூறு என்று கூறுகிறார். பண்டைத் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பைப் புறநானூறு நன்கு புலப்படுத்துகின்றது. பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் வேந்தரைப் பாடியவர் அல்லர். வேந்தனோ, சிற்றரசரோ செய்யாதவற்றைச் செய்ததாகக் கூறிப் போலிப் புகழுரை செய்தவரும் அல்லர். கல்வி, புலமை, அஞ்சாமை, நடுவுநிலைமை ஆகியன தலைசிறந்து விளங்கிய ஒருகாலத்தைக் காட்டும் பெருமையுடையது புறநானூறு என்று விளக்குகிறார். கல்வி, புலமை, நடுவுநிலைமை என்பவை செவ்வியல் பண்புகளில் சில கூறுகளாகும். ஆயினும் அவர் தமது நூலில் செவ்வியல் பண்புகள் எனும் சொல்லை எவ்விடத்திலும் பயன்படுத்தவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்களில் செவ்வியல் பண்புகளைப் பரவலாகப் பயன்படுத்தி உள்ளனர். ஆனால், அப்பண்புகளைப் பகுத்தாராய்ந்து அதன் சிறப்புகளை உவமைப் படுத்திக் கூறியிருப்பது மிகக் குறைவாகவே காண முடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சங்க இலக்கியப் பாடல்களுள் புறநானூற்றுப் பாடல்கள் என்பவை செவ்வியல் இலக்கியங்களின் கூறுகளை உள்ளடக்கியுள்ளன என்று பரவலாக ஆய்வாளர்கள் கூறினாலும் இதுவரை இக்கூற்றை ஆய்வின்வழி நிறுவியதற்கான சான்றுகள் எங்கும் காணப்படவில்லை. இதுவரையில், பொதுவான கண்ணோட்டமாகவே இக்கூற்று ஆய்வளர்களால் கூறப்பட்டுவந்துள்ளமையை அறியமுடிகிறது. அகத்தியலிங்கம்.ச செவ்வியல் கூறுகளை இவ்வாறு வரையரைத்துக் கூறுகிறார். உலகப் பொதுமை, நிலைபேறு, பொது, சார்புநிலை, தெளிவு, தேற்றம், கட்டுப்பாடு, எளிமை, கருவும் உருவும் ஒன்றிய உறவு ஆகியவை செவ்வியல் பண்புகள் என குறிப்பிடுகிறார். மேலும், சங்க இலக்கியங்கள் யாவும் செவ்வியல் இலக்கியங்கள் என்று பொதுவான கருத்தை முன்வைத்துள்ளார். இச்சூழலில் செவ்வியல் பண்பிற்கான தெளிவான விளக்கவுரையும் நுண்ணிய பார்வையும் கிடைக்கப்பெறவில்லை. செவ்வியல் பண்புகளை அடையாளம் காணவும் அதன் தன்மைகளை இனங்காணவும் மிக சிக்கலாக இருந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, புறநானூற்றுப் பாடல்களில், செவ்வியல் பண்புகளை இனங்கண்டு நுண்ணிய முறையில் ஆய்வு செய்து அதனைச் சான்றுகளுடன் நிறுவாத வரையில் இக்கூற்றின் உண்மைத்தன்மை சிக்கலுக்குரிய ஒன்றாகவே கருதப்பட வேண்டிய நிலையில் உள்ளது. ஆகவே, புறநானூற்றில் உள்ள அனைத்துப் பாடல்களையும் நுண்ணிய முறையில் ஆராய்ந்து, அவற்றில் காணப்படும் செவ்வியல் பண்புகளை நுண்ணிய முறையில் அடையாளங்கண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வெளிக்கொணர்ந்தால் இச்சிக்கலுக்கு ஒரு தீர்வு காணலாம் எனும் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.3 ஆய்வு நோக்கம்

கீழ்க்கண்ட நோக்கத்தின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1.3.1 புறநானூற்றில் உள்ள செவ்வியல் பண்புகளை அடையாளங் காணுதல்.

1.3.2 புறநானூற்றில் இடம்பெற்றுள்ள செவ்வியல் பண்புகளின் கூறுகளைப் பகுத்தாராய்தல்.

1.3.3 புறநானூற்றில் காணப்படும் செவ்வியல் பண்புகளின் சிறப்புகளை விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.4 ஆய்வு வினா

இந்த ஆய்வானது, கீழ்க்கண்ட வினாக்களின் அடிப்படையில் அமைய இருக்கிறது.

1.4.1 புறநானூற்றில் இடம்பெற்றுள்ள செவ்வியல் பண்புகள் யாவை?

1.4.2 புறநானூற்றில் காணப்படும் செவ்வியல் பண்புகளின் கூறுகள் யாவை?

1.4.3 புறநானூற்றில் காணப்படும் செவ்வியல் பண்புகளின் சிறப்புகள் யாவை?

### 1.5 ஆய்வு நன்மைகள்

புறநானூறு என்பது தமிழின் தொன்மையான இலக்கியங்களில் ஒன்று ஆகும். தமிழ்மொழியானது செவ்வியல் மொழிக்கான தகுதிப் பேற்றினை உடைய மொழி. புறநானூறு தமிழின் செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தமிழின் தொன்மையான இலக்கியங்களான நாற்பத்து ஒன்று இலக்கியங்களை ஒட்டுமொத்தமாகச் செவ்வியல் பண்புகளை உடைய இலக்கியங்கள் என்று கூறப்பட்டுள்ளன.

ஆனால், தமிழின் ஒவ்வொரு செவ்விலக்கியமும் செவ்வியல் பண்புகளின் அடிப்படையில் ஆராயப்படவில்லை. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள செவ்விலக்கியப் பண்புகள் அடிப்படையில் ஆராய்வதன் வழி உலகளவிலான செவ்விலக்கியப் பண்புகள் புறநானூற்றுப் பாடல்களுக்குப் பொருந்திப் போவதை நுணுக்கமாக வெளிக் கொணர்வதே இந்த ஆய்வின் நன்மை ஆகும்.

## 1.6 ஆய்வு எல்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புறநானூற்றில் நானூறு பாடல்கள் உள்ளன. ஆய்வு எல்லையாக 400 பாடல்களும் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் செவ்வியல் பண்புகள் மொத்தம் பதினொன்று. ஆனால், 8 செவ்வியல் பண்புகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன. செவ்வியல் பண்புகளான தாய்மை தன்மையும், மொழிக்கோட்பாடும் பிறமொழி தாக்கமில்லாத் தனித்தன்மையும் என மூன்று பண்புகளும் இலக்கணக் கூறுகளின் அடிப்படை தன்மைகளைக் கொண்டவையாகும். ஆய்வாளரின் இந்த ஆய்வு இலக்கிய ஆய்வு என்பதால், இந்த மூன்று இலக்கணக் கூறுகளும் ஆய்வுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.7 ஆய்வுச் சான்றாதாரங்கள்

இந்த ஆய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாகப் புறநானூற்றுப் பாடல்களும், அகத்தியலிங்கம் அவர்களின் தமிழ் செம்மொழி சிறப்பு நூலைச் துணைமைச் சான்றாதாரங்களாகவவும் செவ்வியல் பண்புகளின் தொடர்பான ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

#### 1.7.1 முதன்மைச் சான்றாதாரங்கள்

ஆய்வுக்கான முதன்மைச் சான்றாதாரமாகப் புலியூர்க் கேசிகன் உரை எழுதிய புறநானூறு எனும் புத்தகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. "புறநானூற்றில் செவ்வியல் பண்புகள்", என்ற தலைப்பிலான இந்த ஆய்வுக்குப் புறநானூறு என்ற நூல் இந்த ஆய்வின் முதன்மைச் சான்றாதாரம் ஆகும். புறநானூற்றில் 400 பாடல்கள் இந்த ஆய்வுக்கு முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

#### 1.7.2 துணைமைச் சான்றாதாரங்கள்

ஆய்வாளர், செவ்வியல் பண்புகள் தொடர்பான ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணைய கட்டுரைகள் முதலியனவை இந்த ஆய்வுக்குத் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.8 கலைச்சொல் விளக்கம்

இந்த இயலில் ஆய்வாளர் ஆய்வின் தலைப்பில் உட்பட்ட அனைத்துக் கலைச்சொற்களுக்கும் விளக்கம் தந்துள்ளார். எனவே, இந்த ஆய்வில் புறநானூறு, செவ்வியல் பண்பு எனும் சொற்றொடருக்கும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.8.1 புறநானூறு

புலவர்கள் பலரால் பாடப்பட்ட புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களால் தொகுக்கப்பட்டதால் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென்று தெரியவில்லை. புறநானூறு கடவுள் வாழ்த்துச் செய்யுளோடு 400 அகவற் பாக்களைக் கொண்டது. இவற்றுள் 267, 268 ஆகிய இரண்டு பாக்களின் மூலமும் உரையும் கிடைக்கவில்லை. ஆதலால் உ.வே.சாமிநாதையரால் 1894, 1923, 1935 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பதிப்புகளிலும் ஔவை சு.துரைசாமிப் பிள்ளையால் வெளியிடப்பட்ட பதிப்புகளிலும் 398 பாட்டுகளே இடம்பெற்றுள்ளன (பழனிசாமி,1989).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இது பல புலவர்களின் நானூறு பாடல்களின் தொகுப்பாகும். புறநானூறு, எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். சங்க இலக்கியம் அகம் புறம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில், புறநானூறு வெறும் காதல் அல்லது, வெளி உலகம் சார்ந்த, வீரம், போர், கொடை, நற்குணங்கள், பரிசு கேட்டல், பெறுதல் போன்ற புறத்தைப் பற்றிய பாடல் தொகுப்பாகும். புறநானூற்றுப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாடல்கள் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றியும், குறுநில மன்னர்கள், வள்ளல்களைப் பற்றியும் பாடப்பட்டத் தொகுப்பாகும்.

### 1.8.2 செவ்வியல் பண்புகள்

செவ்வியல் என்ற சொல் ஆங்கிலத்தில் classism என்று கூறப்படுகிறது. இச்சொல் Classicus என்ற லத்தின் சொல்லிலிருந்து உருவானது. Classicus என்ற இலத்தின் வேர்ச்சொல்லைக் கொண்ட இந்தச் சொல்லாட்சி கிபி 2ஆம் நூற்றாண்டில் உருப்பெற்றது. செவ்வியல் என்ற சொல் பல்வேறு பொருள்கள் தருகின்றன. செவ்வியல் என்பது “சிறந்த”, “முதல்”, “தரமான” என்று பொருள்படுகிறது. மேலும், சிறந்த இலக்கியம் வளம், செம்மாந்த இலக்கண அரண், மரபுகள், மாண்புமிக்க எண்ணங்களைப் பிரதிபலிக்கும் சொல்வளம், நல்ல பாரம்பரியம், சாகாவரம் பெற்று நிற்கும் சாசுவதப் பண்புகளைக் கொண்டு கால வெள்ளத்தாலும் பிறமொழித் தாக்கத்தாலும் அழியாத, அழிக்க முடியாத துடிதுடிப்பு, இவற்றையெல்லாம் கொண்டு வாழும் நிலையில் இருந்தால் அதுவே செவ்வியல் மொழி எனக் கருதப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். செவ்வியல் பண்பு என்றால் ஒரு மொழிக்குரிய தன்மை அல்லது தகுதி எனத் தெரிவித்துள்ளார் (அகத்தியலிங்கம், 2007).

கிரேக்கத்தில் செவ்வியல் பற்றி கூறுகையில், செவ்வியல் பண்பு என்பது அம்மொழியில் காணப்படும் மகோன்னதமான மேம்பாடு (excellence), செம்மாந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


குறிக்கோள் (value), சிறந்த ஒரு நிலைபேறு (permanence) என்று மூன்று அடிப்படை பண்புகளை முன் வைக்கின்றது (அகத்தியலிங்கம்,1997).

தேவநேய பாவாணர், ஒரு மொழி செம்மொழியாகக் கருதப்படுவதற்குத் தொன்மை, ஒலிச்சால்பு, உலகளாவிய உணர்வுப் பெருமிதம், சொல்லமைப்பின் தொன்மையும் ஒலிச்சுருக்கமும், பிறமொழிகளுக்குக் கொடையும், ஒழுங்கான சொல்லமைப்பும், காரண காரிய தொடர்புடைய சொல்லமைப்பு, தனித்தன்மை, இயற்கைத் தன்மை, உயர்ந்த இலக்கியத் தரம் மிகுந்த நூற்கோவைகள் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் (ஆதிநாராயணன், 2011)

ஒரு மொழி செம்மொழியாகக் கொண்டிருக்க வேண்டுமெனில் அதற்குரிய பதினோரு தகுதிப்பாடுகள் இருக்க வேண்டும் என்கிறார் மணவை முஸ்தாபா (மணவை முஸ்தாபா, 2004). அவை தொன்மை (Antiquity), தனித்தன்மை (Individual), அனைவரும் ஏற்கும் பொதுப்பண்பு (Common Characters), நடுவு நிலைமை (Neutrality), தாய்மைத் தன்மை (Parental Kinship), பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு (Finding expression in the culture art and life experiences of the civilised society), பிறமொழித் தாக்கமிலாத் தனித்தன்மை (Ability to function independently without any impact or influence of any other language and literature), இலக்கியம் வளம் (Literary Prowess), உயர்சிந்தனை (Noble ideas and ideals) , கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு பங்களிப்பு (Originality in artistic and literary expression), மொழிக்கோட்பாடு (Linguistic Principles) என்பனவையாகும். இவ்வாறு செவ்வியல் பண்புகளுக்கான இலக்கணம் பல தரப்பினரால் பல நிலைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9 தொகுப்புரை

இந்த இயலில் ஆய்வைப் பற்றிய விளக்கம் எடுத்துரைக்கப்பட்டது. ஆய்வின் பின்னணி, ஆய்வின் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் நன்மை, ஆய்வு எல்லை, மற்றும் ஆய்வுத் தலைப்பில் காணப்படும் முக்கியச் கலைச்சொற்களின் விளக்கங்கள் யாவும் இவ்வியலில் ஓர் அறிமுகமாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi